**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**SESSION CASE NO.110/2023**

2025 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

அ.சா.3 (பட்டியல் சாட்சி–3) இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி.பி.மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சரவணன் | த/பெ.: | வெங்கடாச்சலம் |
| கிராமம்: | கண்ணன்மேடு | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | கூலி வேலை |
| வயது: | 45 | முகவரி: | கண்ணன்மேடு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 27.06.2025

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் தற்போது மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களை தெரியாது. 27.10.2022–ல் நான் வேலைக்கு சென்று விட்டு இரவு 08.30 மணியளவில் என் வீட்டிற்கு வந்தேன். கண்ணன் மேடு சுடுகாடு அருகில் ஒரே கூட்டமாக இருந்தது. நான் என்னவென்று சென்று கேட்டபோது போலீசார் என்னிடம் எனது பெயர், விலாசம் கேட்டார்கள் சொன்னேன். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் பார்க்கவில்லை.

**<u>அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

கடந்த 27.10.2022–ம் தேதி நான் ஊரில் இருந்தபோது எங்கள் ஊரில் ஆக்கிரமிப்பு செய்து கட்டியிருந்து கட்டிடங்களை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு படி JCB இயந்திரங்கள் மூலம் காவல் துறை மற்றும் அரசு அதிகாரிகள் முன்னிலையில் வீடுகளை இடித்து அகற்றி கொண்டிருந்தபோது அதனை நான் அங்கு நின்று வேடிக்கை பார்த்து கொண்டிருந்ததாகவும், அப்போது எதிரிகள்

அ.சா.1 –ஐ பார்த்து வீட்டை இடிக்க நீதான் காரணம் என கூறி எதிரிகள் வேணுகோபால் , ரமேஷ் இருவரும் TN 51 K 4763 என்ற எண்ணுள்ள Bajaj என்ற இருசக்கரவாகனத்தில் கொற்கையிலிருந்து சாக்கை ரோட்டில் வேணுகோபால் வீட்டிற்கு எதிரே வந்த அ.சா.1–ஐ எதிரி ரமேஷ் வழிமறித்து தகாத வார்த்தைகளை கூறி வீடை இடிக்க நீதான் காரணம் என சொல்லி ரமேஷ் தன் கையில் வைத்திருந்த கம்பியாலும், வேணுகோபால் தன் கையில் வைத்திருந்த கட்டையாலும் அ.சா.1–ஐ மாறி மாறி சாவுடா என கையிலும், காலிலும் மாறி மாறி அடித்தார்கள் என்றும், வேணுகோபால் அ.சா.1–ன் செல்போனை பிடுங்கி கீழே போட்டு உடைத்தார் என்றும், இதை பார்த்து ஓடி வந்த வேணுகோபால் மகன்கள் ஜனார்த்தனும், தமிழ் மைந்தனும் அ.சா.1–ன் வண்டியை அடித்து உடைத்து அவரின் இரண்டு கால்களையும் பிடித்து தர தரவென சாலையில் இழுத்து சென்று வயலில் போட்டனர் என்றும், அதன் பிறகு மேற்படி நான்கு பேரும் கட்டையாலும், கம்பியாலும் அடித்தார்கள் என்றும், அதன் பிறகு அ.சா.1–ஐ நானும், அவரது மனைவியும் துாக்கினோம் என்றும், அவருக்கு உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது எனவும், காயம் பட்ட அ.சா.1–ஐ 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனையில் சேர்த்ததாகவும், மேற்படி சம்பவம் குறித்து காவல் துறையினர் என்னை விசாரித்ததாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :– இல்லை.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.